**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022 - ம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 23 - ம் நாள், வெள்ளிக்கிழமை.

**இடைக்கால மனு எண்.5/2020**

**இன்**

**இடைக்கால மனு எண்.6/2021**

**இன்**

**இடைக்கால மனு எண்.7/2021**

**இன்**

**நிறைவேற்றுகை மனு எண்.9/2008**

**இன்**

**அசல் வழக்கு எண்.170/2005**

N. கிருஷ்ண தாஸ் ........ மனுதாரர் / 3 - ம் தரப்பு உரிமை கோருபவர்

/எதிர்/

**1.** B. ஞானசேகர்

**2.** C. செல்லத்துரை (இறப்பு)

**3.** தங்க லெட்சுமி

**கூடுதல் 4.** தங்கம்

**கூடுதல் 5.** தன லெட்சுமி

**கூடுதல் 6.** C. ஹரி கோபால கிருஷ்ணன்

**கூடுதல் 7.** ராஜ ராஜேஸ்வரி ....... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, 23.12.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக வந்த போது, மனுதாரர் / 3 - ம் தரப்பு உரிமை கோருபவர் தரப்பில் வழக்கறிஞர். திரு. R. ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. வில்பிரட் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர் / 3 - ம் தரப்பு உரிமை கோருபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## பொதுவான உத்தரவு

**1.** இம்மனுவானது, இடைக்கால மனு எண்.6/2021 நிறைவேற்று மனுவில், மனுதாரர் கிருஷ்ண தாஸ் என்பவர், 3 - ம் நபர் பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

## 2. மனுவின் சுருக்கம் :

இம்மனுவானது, தான் தாக்கல் செய்துள்ள வ.வி.எண்.4/2020 மனுவில், புல எண்களைக் குறித்து தெரிவிக்கும் பொழுது, 615/14 மற்றும் 615/4 என தவறுதலாக தட்டச்சு செய்து விட்டதாகவும், ஆனால், சரியான புல எண்கள்.651/4 மற்றும் 651/2 என தெரிவித்து, தாம் தாக்கல் செய்துள்ள வழக்கிடை விண்ணப்ப மனு மற்றும் இடைக்கால மனு எண்.4/2020 - ல் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

## 3. எதிருரையின் சுருக்கம் :

அசல் நிறைவேற்று மனுவின் மனுதாரர், புல எண்களைக் குறித்து தெரிவித்து, அதன் அடிப்படையில், இந்த மனுவின் மனுதாரர் பரிகாரம் கோரிவிட்டு, மீண்டும், அந்த புல எண்கள் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து விட்டு, மனுவின் மொத்த சாரம்சத்தையும் மாற்ற முயற்சிப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த நிறைவேற்று

மனுவானது, 2008 - ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, நாளது தேதிவரை தீர்ப்பாணை பெற்றவர் முழு பலனை அடையாமல் இருக்கும் சூழ்நிலையில், இது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென தனது எதிர்நிலைப்பாட்டினை தெரிவித்துள்ளார்.

**4. <u>இரு தரப்பும் கேட்கப்பட்டது</u> :**

இந்த நீதிமன்றம், மனுதாரரின் மனுவினை பரிசீலித்து பார்த்த பொழுது, இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு என்பது, குறிப்பிட்ட புல எண்களில் உரிமை இருப்பதாக தெரிவித்து தாக்கல் செய்த மனுவாகும். அவ்வாறு உரிமை கோரும் ஒரு நபர், தனது உரிமை எந்த புல பூமியில் உள்ளது என்பதனை நன்கு தெரிந்து தான் இந்த மனுவினை தாக்கல் செய்திருக்கக் கூடும் என்றும், 3 - ம் நபராக நிறைவேற்று மனுவில் மனுவினை தாக்கல் செய்து விட்டு, அதே வேளையில், மீண்டும், அந்த மனுவினை திருத்தம் செய்ய வேண்டுமென மனுக்கள் தாக்கல் செய்வது, ஏற்கனவே, நிறைவேற்று மனுவில் ஏற்பட்டுள்ள 14 வருட தாமதத்தை மேலும் அதிகப்படுத்தக் கூடிய ஒரு செயலாகத் தான் இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இடைக்கால மனு எண்.6/2020 மனுவினை தாக்கல் செய்து விட்டு, மனுதாரர், இந்த மனுவினைக் குறித்து, முழு விசாரணைக்கு சுமார் 6 மாதங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் காலம் தாழ்த்தி வந்ததும் தெரிய வருகிறது. இச்சூழ்நிலையில், இந்த மனு என்பது, அசல் நிறைவேற்று மனுவினை மேலும் தாமதிக்கக் கூடும் என்ற காரணத்தினாலும், 3 - ம் நபர் உரிமைக் கோருபவர் தமது உரிமைக் குறித்து தவறுதலான தகவலை தெரிவித்து, நீதிமன்றத்தை திசை திருப்பும் முயற்சியினை ஊக்குவிக்க இயலாதென்ற காரணத்தினால், இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**5. <u>முடிவு</u> :**

இறுதியாக, வ.வி.எண்.6/2021 தள்ளுபடி செய்யப்பட்டபடியால், இடைக்கால மனு எண். 5/2020 இடைக்கால மனு எண்.6/2021 மற்றும் இடைக்கால மனு எண்.7/2021 தகுதியின் அடிப்படையில் செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 - ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

**மா.உ.நீ, இரணியல்.**

**<u>வரைவு / சீரான பொதுவான உத்தரவு</u>**

இடைக்கால மனு எண்.5/2020
இன்
இடைக்கால மனு எண்.6/2021
இன்
இடைக்கால மனு எண்.7/2021
இன்
நிறைவேற்றுகை மனு எண்.9/2008
இன்
அசல் வழக்கு எண்.170/2005
தேதி 23.12.2022